Registered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol 42 — No. 4

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 42 | சௌமிய வைகாசி 1969 மே | இதழ் 5

உள்ளுறை

இதழாசிரியர் : மு. அருணசலம், எம். ஏ.,
துணையிதழாசிரியர் : வித்துவான் அம்பை. இரா சங்கரன்.
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

சென்னை மயிலாப்பூர் குமரகுருநாத முதலி தெருவி லுள்ள சமாஜ அலுவலகத்தில் 25-5-69 ஞாயிறு காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவுக் கணக்கு, மாதக் கூட்டம் பற்றி ஆலோசிக்கப்பெறும். செயற்குழு உறுப்பினர்கள் யாவ ரும் தவறாது வருமாறு கேட்டுக்கொள்ளப்பெறுகின்றனர்.

(செயலாளர்)

சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் முதற் சமயக் கட்டளையின் சார்பில், மயிலாப்பூர் ஸ்ரீ வெள்ளிச்சுரர் ஆலயத்தில், 20-4-69 ஞாயிறு மாலையில் வித்துவான் அம்பை சங்கரனார் அவர்கள் "மங்கையர்க் கரசியார்" பற்றியும், 4-5-69 ஞாயிறு மாலையில் நாகர் கோயில்-சைவப்புலவர்-வித்துவான்-சி. குமரேச பிள்ளை அவர்கள் "உமாபதி சிவம்" பற்றியும் விரிவுரையாற்றி னார்கள்.

வைகாசித் திங்கள் சிறப்பு நாள்கள்

9	(22-5-69)	பூசம்-நமிநந்தியடிகள் நாயனார் விழா
,,	,,	,, -சேக்கிழார் நாயனார் விழா
10	(23-5-69)	ஆயிலியம்-சோமாசிமார நாயனார் விழா
20	(2-6-69)	மூலம்-திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் விழா
	do	-முருக நாயனார் விழா
	do	-திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் விழா
	do	-திருநீலநக்க நாயனார் விழா
29	(11-6-69)	பரணி-கழற்சிங்க நாயனார் விழா.

Reg. M. 2330 உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 42	சௌமிய ஹு வைகாசி 1969 மே	இதழ் 5

சம்பந்தசுவாமி கோயில்

ஆசிரியர்

சமயாசாரியர் மூவர் பற்றிய வரலாறுகளைப் பெரிய புராணம் கூறுகிறது. மாணிக்கவாசகர் வரலாற்றைத் திரு வாதவூரடிகள் புராணம் கூறுகிறது. இவ்விரண்டிலும் சொல்லப் பெருத மிகப் பல செய்திகளை ஆங்காங்குள்ள தல புராணங்கள் கூறுகின்றன. திருஞான சம்பந்தர் வணிகனுக்கு விடம் தீர்த்த அற்புதம் திருமருகலில் நடைபெற்றதாகப் பெரிய புராணம் கூறுகிறது; இதே செய்தியைத் திரு புறம்பயத் திற்கு உரியதாகத் திருவிளையாடற் புராணத்து வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்த படலம் கூறுகிறது. அப்பர் சுவாமிகள் பாண்டுரில் வந்து வழிபட்டதாக அவ்வூர் வரலாறு கூறுகிறது. (சித்தாந்தம் 1965 பார்க்க)

இப்படிப்பட்ட செய்திகள் மிகப் பல. மாயூரத்திலிருந்து மேற்கே குத்தாலம் நோக்கிச் செல்லும் பஸ்சாலையில் புகை வண்டி நிலையத்திலிருந்து 1-மைல் தூரத்தில் சாலையை யொட்டித் தென்புறத்தில் சம்பந்தர் சுவாமி கோயில் என்ற ஓர் அழகிய கோயில் உள்ளது. இவ்வூர் சிற்றம்பல ஞானிகள் சமாதி கொண்ட சிறப்புடைய சித்தர்க்காடு என்பது. இது மேற்கு நோக்கிய கோயில். எதிரில் அழகிய குளம் உள்ளது.

1968-இல் கும்பாபிஷேகம் நடந்தது. இதுபற்றிய வரலாறு பின் வருமாறு: —

திருஞான சம்பந்தர் குத்தாலம் (திருத்துருத்தி) வழிபட்ட பிறகு மாயூரம் நோக்கி வந்து கொண்டிருந்தார் வழியில் சாலையின் தென்புறத்தில் மூவலூர் என்ற பெரும் கற்கோயில் உள்ளது. இது ஒரு வைப்புத்தலம். அப்பர் சுவாமிகள், இத்தலத்தை இரண்டு இடங்களில் போற்றுகிறார். திருஞானசம்பந்தர் இங்கு வந்து வழிபட்டுப் பணிந்தார் என்று சேக்கிழார் கூறுகிறார்.

"திரைத்தடம் புனல்பொன்னி சூழ்திருத் துருத்தியினில்
வரைத்தலைப் பசும் பொன்னெனும் வண்டமிழ்ப்பதிகம்
உரைத்து மெய்யுறப்பணிந்து, போந்துலவு மன்னதியின்
கரைக்கண் மூவலூர் கண்ணுதலார் கழல்பணிந்தார்."

எனவே பதிகம் பாடினார் என்றும் நாம் கருதவேண்டும். ஆனால் பதிகம் கிடைக்கவில்லை.

மூவலூர் கோயில் கிழக்கு நோக்கியது. சன்னிதிக்கு முன்பாக உள்ள சித்தர்க்காடு சென்று சம்பந்தர் மூவலூருக்கு எதிர்ப் புறமாக வந்து தரிசிக்க விருப்பம் கொண்டாராம். திரும்பிப்பார்த்த போது அவருக்கு அங்குள்ள மணல் எல்லாம் சிவலிங்கமாகக் காட்சியளித்தது. அப்போது சன்னிதிக்குக் கிழக்கில் நின்ற சம்பந்தர் மயங்கி தமக்கு முன்பு காணப்பட்ட அனந்த கோடி லிங்கங்களைத் தாண்டிச் செல்ல அஞ்சி, தாம் இருந்த இடத்திலேயே ஒரு சிவலிங்கம் தாபித்து வழிபட்டாராம்.

இவ்வாறு சம்பந்தர் வழிபட்ட காரணத்தினாலே சம்பந்தர் சுவாமி கோயில் என்று இக் கோயில் பெயர் பெற்றிருக்கிறது. இங்கு சுவாமி பிரமபுரீஸ்வரர் ஆனபடியால் இங்கும் அதே பெயரைச் சம்பந்தர் சூட்டினார் என்பர். அம்பிகை திரிபுர சுந்தரி அழகிய வடிவம்; மேற்கு நோக்கிய சன்னிதி. சுத்தமான பிராகாரங்களோடு கோயில் அமைந்துள்ளது. மூவலூர் வழித்துணைநாதர் என்பது பெயர். பெயருக்கேற்ப அவர்

தம்மைத் தரிசிக்க சம்பந்தருக்கு இலிங்கங்களுக்கு நடுவே வழி காட்டினுர் என்ப து பொருத்தமே.

நிருதி விநாயகர் சிறப்பான கோயில்; பாலசுப்ரமணியர் மயிலோடு தனியே அமர்ந்திருக்கிருர். அடுத்து தேவியரோடு அமைந்த முருகன் கோயில்; பின்னர் இலக்குமி, விஸ்வநாதர், துர்க்கை சண்டேசர், பிரமன் ஆகியோர் வடபால் உரிய இடங்களில் அமர்ந்துள்ளனர். பின்புறம் லிங்கோத்பவர் முதலாயினேர்; அதன்புறத்தில் தக்ஷிணுமூர்த்தி.

நடராஜமூர்த்தி, அம்பிகை சிறிய உருவங்கள்; உற்சவ மூர்த்திகள் அனைவரும் உள்ளனர். போதுமான வருவாய் உள்ள கோயில்; நிர்வாக அதிகாரியும் உள்ளார்.

இச்சம்பந்தர் சுவாமி கோயிலும் பிற கோயில்களும் போல, பல கோயில்களில் சமயாச்சாரியார் பற்றிய வரலாறுகள் வழங்கி வருகின்றன. இவற்றிற்குப் பெரிய புராணத்தில் ஆதாரம் இல்லாமல் போயினும், இவற்றின் தொகுப்பு சுவையுடைய வரலாறு ஆகும் என்பதில் ஐயமில்லை.

சைவ சித்தாந்த மகா சமாஜம்

63-ஆம் ஆண்டு நிறைவு விழா

சைவ இளைஞர் மாநாட்டுத் தலைமையுரை

[கே. இ. அருணுசலம், எம். ஏ., பி. காம்.]

சைவப் பெருமக்களே! தாய்மார்களே! இளைஞர்களே!

திருமயிலையில் நடைபெறும் சைவ இளைஞர் மாநாட்டிற்குத் தலைமை தாங்குமாறு என்னை அழைத்துச் சிறப்புச்

செய்த சைவ சித்தாந்த மகா சமாஜத்திற்கு உளங்கனிந்த என் நன்றியும் வணக்கமும் செலுத்திக் கொள்கிறேன்.

வரலாற்று உண்மையும் தொன்மைப் பெருமையும் கொண்டுள்ள திருமயிலையில் இம்மாநாடு நடைபெறுவதன் பொருத்தம் பற்றி யான் சில உண்மைகளைக் கூற விரும்புகிறேன். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கிரேக்க நாட்டுத் தாலமி என்னும் பேரறிஞர் தாம் எழுதிய பூகோள நூலில் மல்லியார்ப்ப என்பதாகத் திருமயிலையைக் குறிப்பிட்டுள்ளார். இக்காலத்திலே திருமயிலை தமிழ் மணங்கமழும் சூழ்நிலையில் வளர்ந்தோங்கி யிருந்தது என்பதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. "தொண்டை மண்டலத்தின் வண்டமிழ் மயிலை" எனச் சித்தரித்துக் காட்டுகிறது கபிலரகவல். உலகினுக்கு உபதேசம் செய்யத்தக்க உத்தமராய் விளங்கிய திருவள்ளுவர் வாழ்ந்த இடம் திருமயிலை யன்றோ? அக்காலத்தில் "திருமயிலாப்பூர் என்னும் திவ்விய தலம் தேவாமிழ்தம் பிறந்த திருப்பாற் கடலெனப் பொலிவுற்றது. அவ்வமிழ்தத்தை உண்ணுவதற்கு மொய்த்த தேவரினங்களைப் போன்றவர் பல நாடுகளிலிருந்து அற உபதேசங்களைக் கேட்க வந்தனர்; அவ்வமிழ்தம் பருகவொட்டா தெழுந்த நஞ்சம் போன்றது அங்குத் தொக்க மாந்தர் தம் அறியாமை. அந்த நஞ்சத்தினைத் தான் விழுங்கித் தேவருக்கு அமிழ்தம் பகுத்தருளிய இறைவன் போன்றவர் அவ்வறியாமையை நீக்கித் திருக்குறள் உபதேசம் செய்தருளிய ஆசிரியர் திருவள்ளுவனர். இங்ஙனம், ஆசிரியர் தெய்வப் புலமைத் திருவள்ளுவனர் உலகனைத்தும் நல்லொழுக்கத்திற்படுத்துத் தம்முடைய திருமேனியினை முதல்வன் அருள் வெள்ளத் தழுத்தி அதனை அவ்வண்ணமாக்கித் தாம் இறைவன் திருவடியோடு ஒன்றி இரண்டறக் கலந்திட்டார்" என மறைமலை அடிகள் எடுத்துக் காட்டும் திருவள்ளுவர் பெருமை திருவள்ளுவர் வாழ்ந்த திருமயிலைக்கும் ஓரளவில் சாரும். உமாதேவியார் சிவபெருமானைப் பூசித்த தலம் என்பதை "மட்டிட்ட புன்னையங்கானல் மடமயிலை" எனக்

குறிப்பிட்டுக் காட்டுகின்றார் திருஞானசம்பந்தர். எலும்பைப் பெண்ணுருவாக்கியது என்பது யாவரும் உணர்ந்ததே. திருநாவுக்கரசு நாயனார் தாம் பாடியருளிய புக்க திருத்தாண்டகத்தில், "மங்குல் மதி தவழு மாடவீதி மயிலாப்பு" எனத் திருமயிலையை நமக்கு அறிமுகப்படுத்துகிறார். தேவார காலத்திற்குப் பிற்பட்டவரும் 11ஆம் திருமுறைப் பாடல்களில் சிலவற்றை இயற்றியவருமான திருவாலி யமுதனார் திருமயிலையில் பிறந்தவர் என்பது அவர் தமது பாடலில் தம்மை "அணி ஆலைகள் சூழ் மயிலை மறைவல வாலி" எனக் குறிப்பிடுவதால் அறிந்து கொள்ளலாம். சேக்கிழார் பெருமானும் திருமயிலையைக் குறிப்பிடும் போதெல்லாம் சிறந்த அடைமொழிகளைப் பயன்படுத்துகிறார். "மணி மாடங்கள் மன்னுசீர் மயிலைத் திருமாநகர்" "தரைவளர் சீர்த் திருமயிலை" என அவர் பெரிய புராணத்தில் நமக்குக் காட்டுகிறார். திருவல்லிக்கேணியும், திருமயிலையைச் சேர்ந்தது என்பதைத் "தேனமர் சோலை மாடமா மயிலைத் திருவல்லிக்கேணி" எனக் காட்டுகிறார் திருமங்கை ஆழ்வார். இத்தகைய சிறப்புகள் திருமயிலைக்கு உள்ளன என்பதால் சென்னை மாநகர் பெருமக்களே பெருமிதங் கொள்ளக் காரணமாயுள்ளது. இத்தகைய சிறப்புடைய திருமயிலையில் மூன்று நாள்களாக நடைபெற்று வரும் சைவ சித்தாந்த மகா சமாஜ மாநாட்டின் இறுதி நிலையில் இளைஞர் மாநாடு தொடங்குகிறது. இதில் இளைஞர்களுக்கு மட்டும் பங்குண்டு எனக் கொள்வதற்கில்லை. பெரியோர்களுக்கும் பங்குண்டு; கடமையுண்டு; பொறுப்பு உண்டு. பெரியோர்களுக்குள்ள பொறுப்பைப் பற்றி முதற்கண் கூற விரும்புகிறேன்.

தங்கள் குழந்தைகளும் சிறுவர்களும் சிறந்த ஒழுக்க சீலர்களாகத் திகழ்ந்து எல்லா நலங்களையும் பெறவேண்டும் எனப் பெரியோர்கள் கருதவேண்டும். இதற்காக அவ்வப்போது செயலில் ஈடுபடவேண்டும். ஏனெனில், பெற்றோர்கள் எண்ணங்களும், செயல்களும் அவர்கள் குழந்தைகளின்

மனத்தில் பதிகின்றன என்பது வெளிப்படை. ஆதலினால், அறிவுடைய பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் இளம் பருவத்தினராக இருக்கும்போதே தக்கவாறு நடந்து கொள் வார்கள். நீண்டகாலமாக மகப்பேறில்லாமல் பின்னர் யாகம் செய்ததன் விளைவாகத் தசரதர் மக்கள் நால்வரைப் பெற்றெடுத்தார். சிறந்த ஒழுக்க முறைகள் தம் மக்கள் மனத்தில் பதியவேண்டும் என்பதற்காகத் தசரதன் ஒரு நன்னாளில் நீராடித் தூய ஆடை அணிந்து கொண்டு தெய்வ சிந்தனையுடன் தம் குழந்தைகளை முதல் முதலில் கண்டனன் என நாம் அறிகிறோம். அதிகமான் என்னும் சிற்றரசனும், தம் மகன் சிறந்த போர் வீரனாக விளங்கவேண்டும் என்ப தற்காக, போர் வீரர் அணியும் உடை அணிந்து கொண்டு முதல் முதலில் தம் மகனைக் கண்டான் எனச் சங்க கால இலக்கியம் கூறுகிறது. நம் சைவப் பெருமக்களோ இம் முறைக்கும் மேற்பட்ட கொள்கைகளைக் கடைப்பிடித்தார் கள். தங்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் "நன்மக்களாகத் திகழவேண்டும். நாட்டிற்கும் சமயத்திற்கும் நலம் தேடித் தரத்தக்கவர்களாக விளங்கவேண்டும் எனத் தவங்கிடந்து நன்மக்களைப் பெற்றெடுத்தார்கள்." மார்க்கண்டேயர் இதற் குச் சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும். சிவபாத இருதய ரும் பகவதியம்மையாரும் சிவபெருமானிடம் ஆரா அன்பு டன் வழிபட்டு ஒழுக்க நெறியில் நின்று திருஞான சம்பந்த ரைப் பெற்றெடுத்தார்கள். இவ்வாறே தோன்றியவர் மெய்கண்டார். வேறொரு வகையிலும் இதன் பெருமை யைக் கண்டறியலாம். இப்பூவுலகினில் பிறந்து உய்யவேண் டும் என இறைவனால் விதிக்கப்பட்ட உயிர்கள் தாங்கள் சிறந்த பெற்றோர்களுக்குக் குழந்தைகளாகப் பிறக்க வாய்ப் புக் கிடைக்காதா என ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின் றன என ஆவி உலக ஆராய்ச்சி நமக்கு அறிவிக்கிறது. எனவே, பெற்றோர்களாக எதிர்பார்ப்பவர்கள் தங்களையே சீலர்களாக்கிக் கொள்வதுமன்றி பிறந்த குழந்தைகளைச் சீரிய முறையில் ஒழுக்கப் பாதையில் நடத்திச் செல்வதும் அவர்களது கடமையாகும்.

இனி, இளைஞர்களுக்கு ஏற்பட்டுள்ள பொறுப்பைச் சற்று கவனிப்போம். அறநெறியில் நின்று தெய்வ வழிபாடு செய்து வாழ வேண்டியவர்கள் முதியவர்களே எனக் கருத இடமில்லை. "இப்போது நாம் இளையோம். வயது முதிர்ந்தபோது அற வழியில் நிற்போம்" எனக் கருதாது "நாள்தோறும் அறம் செய்க" என,

"அன்றறிவா மென்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை"

என்னும் குறட்பாவில் திருவள்ளுவர் அறிவுறுத்துகிறார். இவ்வாறு அற வழியில் நின்று நன்மை அடைவதற்கு உடல் நிலை நன்கு அமையவேண்டும்.

"உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று
உடம்பினை யானிருந் தோம்பு கின்றேனே"

எனவும்


"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
... ...
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே"

எனவும் திருமூலர் கூறுவதிலிருந்து மனத்தைத் தான் செல்லும் வழிகளிலெல்லாம செலுத்தி அவ்வகையில் ஈடுபட்டு வாழ்நாளைக் குறைத்துக் கொண்டு மடிந்து விடுவதால் பயன் இல்லை என்பது உண்மை. சித்தர் பாடல் ஒன்றுள்ளது. அதை நீங்கள் கேட்டிருக்கக் கூடும். அது "நந்தவனத்தில் ஓராண்டி அவன் நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக் கொண்டுவந்தான் ஒரு தோண்டி அதைக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி" என்பதாகும். இங்கு "நந்தவனத்தில் ஓராண்டி" என்னும் தொடர் இப்பூவுலகத்தில் பிறக்க வேண்டியதொரு உயிராகும். "நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி" என்பது "இப்பூவுலகினில் பிறக்க வழி செய்ய வேண்டும் என்னும் கோரிக்கை விடுத்து" என்பதாகும்.

குயவன் என்பவன் இங்கே பிரமன். குயவன் பானை, தோண்டி, குடம் முதலியவை செய்வதுபோல் பிரமன் உடம்புகளை அமைக்கிறான். தோண்டி என்பது உடல். இந்த உடல் கிடைத்தவுடன் ஐம்புலன்களின் வழியே வாழ்க்கை நடத்துதல், "கூத்தாடி கூத்தாடி" என்னும் சொற்களினால தெரிவிக்கப்படுகிறது. எனவே, பெறுதற்கரிய உடலைத் தீய வகையில் ஈடுபடுத்தி நாசம் செய்யக் கூடாது. இவ்வாறு நம்மையே நாம் கெடுத்துக் கொள்ள முடியாத நிலை ஏற்படுமானால் தெய்வ அருள் துணை செய்ய வேண்டும். இவ் வுண்மையைத் திருநாவுக்கரசு நாயனார் எடுத்துக் கூறுகிறார். "மனம் என்னும் படகில், அறிவு என்னும் துடுப்பைக் கொண்டு சினம் என்னும் சரக்கை ஏற்றிச் செல்கிறபோது ஆசை அல்லது காமம் என்னும் பாறை தாக்கி அப்படகு கவிழ்ந்து அழியும்போது எம் இறைவனே, உன்னை அறிந்து கொள்ளும் உணர்வை அளிப்பாயாக" என்னும் கருத்தைக் கொண்டுள்ளது அப் பாடல்:—

மனம் எனும் தோணி பற்றி
மதியெனும் கோலையூன்றிச்
சினம் எனும் சரக்கை யேற்றிச்
செறிகடல் ஓடும்போது
மதன் எனும் பாறை தாக்கி
மறியும்போது அறியவொண்ணாது
உனைஉணர் உணர்வை நல்காய்
ஒற்றியூருடைய கோவே

இத்தகைய தூய்மையும், ஆற்றலும் எவ்வாறடையலாம் என்பதை நம் முன்னோருக்கு முன்னவராகிய மணிவாசகப் பெருமான் எடுத்துக் காட்டுகிறார். களவு முறையில் நாயகனுடன் சென்ற தன் மகளைக் காணாது அவள் சென்ற வழியே சென்று தன் மகளைத் தேடுகிறாள் தாய். வழியில் தன் மகளைப்போன்ற ஒரு பெண்ணும் அப்பெண்ணின் காதலனும் வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து "உங்களைக்காண, என் மகளும் அவள் காதலனும் திரும்பி வந்து



திருமயிலாப்பூரில் நடைபெற்ற சமாஜ 63-ஆம் ஆண்டு விழாவின்போது மாநாட்டுத் தலைவர் திருவாசகமணி திரு. K. M. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு பழநி திரு. க. அரங்கசாமி முதலியார் அவர்கள் பொன்னுடை போர்த்திச் சிறப்புச்செய்த காட்சி.

விட்டதாகவே மகிழ்ச்சியடைந்தேன். உங்களைப் போன்றவர்கள் இந்த வழியில் செல்வதைக் கண்டீர்களா'' என வினவினாள். அதற்கு அத்தலைமகன் "அன்னையே என்னைப் போன்ற ஆண் மகனைக் கண்டேன் (பின்னர் நாயகியைப் பார்த்து) அவ்வாண் மகனுக்கு அயல் நின்றவர் பற்றி நீயே சொல்வாயாக'' என்றனன். தன் காதலியை யன்றி மற்றெந்த மாதைப் பற்றி எடுத்துக் கூறவும் தயங்கிய தமிழ் மகனின் பெருமையை இதில் காண்கிறோம்.

சிறிது தூரம் சென்றபின் தாய் இணைபிரிந்திராத காதலன் காதலி இருவரைக் காண்கிறாள். அக்காதலன் கூறிய விடை அவனது பண்பாட்டை உணர்த்துகிறது. "அன்னையே நீ அடையாளம் கூறிக் குறிப்பிட்டவர்கள் இருவரை அடுத்துள்ள குன்றின் அருகில் கண்டோம். அவர்கள் எப்படி இருந்தார்கள் தெரியுமா? என்னைக் காத்தளிக்கும் தில்லைச் சிற்றம்பலவனும் அவனை விட்டு நீங்காத அவனது அருள் சக்தியும் ஒன்றாகவே காட்சியளிப்பதுபோல் எங்களுக்குப் புலப்பட்டார்கள். இது என்ன நன்மை என்று கைதொழுதோம்'' என்கிறான். இக்கருத்துக்களை மணிவாசகனார் திருக்கோவைப் பாடல்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. இத்தகைய கொள்கைகள் நாட்டில் பரவ வேண்டும். நம் இளைஞர்கள்பால் இவ்வாறு ஆண்களையும், பெண்களையும் காணும்போது சிவம் சக்தியாகக் கருதும் மனப்பான்மை போற்றத்தக்கது.

இவ்வுண்மையைக் கருவூர்த் தேவர் சற்று எளிதாகவே எடுத்துக் காட்டுகிறார். "உலகீரே! நீங்கள் உலகியலிலே காதல் வாழ்க்கையில் ஈடுபடுங்கள். ஆனால் அதில் நீங்கள் கொண்டுள்ள ஆர்வத்தில் மிகச் சிறிய ஒரு பங்கையாயினும் இறைவன்பால் செலுத்துங்கள். அப்போது அப்பெருமான் உங்களுக்கு என்ன என்ன நன்மைகள் செய்யக்கூடும்? கேளுங்கள்.

"தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவை நூறுயிரம் கூறிட்டு
அத்திலங்கு ஒருகூறு உன்கண் வைத்தவருக்கு
அமருலகு அளிக்கும் நின்பெருமை
பித்தனென்று ஒருகால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிவைத்த கங்கை
கொண்ட சோளேச் சரத்தானே"

என எடுத்துக் காட்டுகிறுர். எனவே, உடலை நன்முறையில் பாதுகாத்து ஒழுங்கான முறையில் பொருள் ஈட்டிச் சீரான நியதியுடன் வாழ்ந்து இம்மைக் கன்றி மறுமைக்கும் வழி வகுத்துக் கொள்ள சமயம் உதவுகின்றது. சமய வாழ்வு வாழக் கூடியவர்கள் தங்களுக்கே வாழ்வதில்லை. பிறர்க்கு உதவும் மனப்பான்மை வளர்கிறது. இளம் பருவத்திலே இத்தகைய கொள்கை மனத்தில் பதியுமாளுல் இளைஞர்கள் வீரர்களாகத் திகழ்வார்கள். அரிய பல செயல்களை ஆற்ற இயலும். ஆங்கிலக் கவி தென்னிசன் என்பவர் Sir Gala Gad என்னும் ஆங்கிலச் செய்யுளில் காட்டுகிறுர். "எனக்குப் பத்துப் பேர்கள் ஆற்றல் இருக்கிறது. ஏனெனில், என் உள்ளம் தூய்மையாக இருக்கிறது" எனக் காலகேடு என்னும் இளைஞர் கூறியதாக I have the strength of ten because my heart is pure என ஆங்கிலத்தில் தெரிவித்துள்ளார்.

பெரியோர்களும் இளைஞர்களும் ஒன்று சேர்ந்து தெய்வீகப் பாதையில் முன்னேற வேண்டும். ஒருவருக்கொருவர் தொடர்பின்றி இருத்தலில் அடைய வேண்டிய நன்மைகள் எத்தனையையோ இழக்கவேண்டிவரும். வரும் பெரியோர்கள் தாங்கள் கற்றவற்றை இளைஞர்களுக்குப் புகட்டவேண்டும். இவ்வாறு செயற்படுமாளுல் இத்தகைய

இளைஞர்கள் மாநாடு இயங்குவதில் நற்பலனை விரைவினில் அடையலாம். சிவபெருமான் இங்கிலேயில் அருள் சுரப்பாராக.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையக மும் துயர் தீர்கவே.

—திருச்சிற்றம்பலம்.

" கடவுளால் முடியாத செயல்கள் "

நூல் வெளியீடு, புன்செய்ப் புளியம்பட்டி
மறைமலை அடிகள் மன்றம்.
(புலவர்மணி–சித்தாந்த வித்தகர்
முரு. பழ. இரத்தினம் செட்டியார்)

நாகபுரி மோரிஸ் கல்லூரிப் பேராசிரியர் திரு. D. Y. Despande, M. A. (திரு. தேஷ்பாண்டே) ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதியிருக்கிறார். அந்நூலுக்கு "The Truth about God" எனப் பெயரிட்டிருக்கிறார். நிரீச்சுர வாதத்தை நிலைநிறுத்துவதற்காகவே இந்நூலை எழுதியிருக்கிறார், அந்நூல் பக்கம் 24 முதல் 26 வரை எழுதியிருப்பதன் சுருக்கத்தைக் கீழே தருகிறேன்.

"It is said that God is all-powerful, all-kind and all-wise. There is a very large amount of positive evil in our world. So naturally one of the Following Conclusions will Follow :—

(i) That God, though he sees the evil and desires to destroy it, he has not the power to achieve His object; (ii) That though God sees the evil and desires to destroy it, he does not possess the requisite knowledge of

the means to destroy it; (iii) That though he sees the evil and posses the power and the knowledge of the means of destroying it, he does not posses the goodness to destroy it; (iv) That he sees no evil at all and thus does not possess all knowledge. All these consequences are possible. But it is utterly impossible that God possess all the infinite power, infinite wisdom, and infinite goodness and yet either produces or suffers to exist a large amount of evil !!

திரு. தேஷ்பாண்டே எழுதி யிருப்பதைப் பின் வருமாறு அடக்கித் தமிழில் கூறலாம் :—

"கடவுளை எல்லாம் வல்லவர்; எல்லாம் அறிபவர்; எல்லையில் கருணையுடையவர் என்று ஆத்திக சமயத்தினர் அனைவரும் கூறுகின்றனர். நாம் வாழும் இவ்வுலகில் சகிக்க முடியாத துன்பமும் தீமையும காணப்படுகின்றன. கடவுள் எல்லாம் வல்லவராக இருந்தால் இவற்றை உடனே ஒழித் திருப்பர்; கடவுள் எல்லாம் வல்லவர்தான்; தீமையையும் துன்பத்தையும் உயிர்களின் முன்னேற்றத்திற்குத் தேவை என்றே வைத்திருக்கிறுர் என்றுல் அவர் எல்லையில் கருணை யுடையவராக இருக்க முடியாது; கடவுள் எல்லா வல்லமை யும் எல்லையில் கருணையும் உடையவர்தான்; ஆனல் தீமை யையும் துன்பத்தையும் நாம் கருதுவது போலக் கொடுமை யானவையாக அவர் கருதவில்லை என்றுல், நாம் படும் துன் பத்தை அவர் அறிய முடியாதவராகிறுர்; அப்படி என்றுல் அவர் எல்லாம் அறிபவராக இருக்க முடியாது. எனவே எப்படிப் பார்த்தாலும் கடவுள் இம் மூன்று தன்மைகளை யும் ஒருங்கே உடையவராக இருப்பதற்கில்லை; இருப்பா ராளுல் உலகில் தீமை இருக்க இடமில்லை.''

இஃதே திரு. தேஷ்பாண்டே கண்ட தர்க்கரீதியான முடிபாகும்.

எல்லாம் வல்லமைக்குப் பொருள் யாது? எதனையும் நினைந்தபடி உடனே செய்யக்கூடிய வல்லமை என்றே

அதனை வைத்துக்கொள்வோம். இறைவன் தனக்கென ஒரு தேவையும் இல்லாதவன். எனவே அவன் எதைப் பற்றி நினைப்பான்? உயிர்களின் நலம் குறித்தே அவன் நினைக்க வேண்டும். உயிர்களை இறைவன் உண்டாக்கவில்லை. அவையும் அவனைப்போல அநாதியாக இருப்பவை. அவற்றின் அறிவு, இச்சை, செயல்கள் படிமுறைப் பயிற்சியாலேயே நலத்தைப் பற்றும் தன்மை வாய்ந்தவை. இத் தன்மை அவைகளுக்கு இயற்கை. ஒரு பொருளின் இயற்கைத் தன்மையை மாற்றினால் அப்புறம் அஃது அப்பொருளாக இருக்கமாட்டாது; அதாவது ஒரு பொருளின் இயற்கைத் தன்மையை மாற்றினால் அஃது அந்தக்கணமே அழிந்துபோகும். எனவே படிமுறைப்பயிற்சியால் நலத்தைப் பற்றும் உயிர்களின் இயற்கைத் தன்மையை எங்ஙனம் மாற்றுவது? மாற்றினாலும் அவை அழிந்துபோகும். ஆகவே அத்தன்மையை மாற்றாமல், அத்தன்மைக் கேற்றவாறே பயிற்சி அளித்து நலம்பெறச் செய்வதுதானே பொருத்தமானதாக இருக்கும்?

உயிர்களின் அறிவு, இச்சை, செயல்களை இறைவன் உண்டாக்கவில்லை; அவை அவைகளுக்கு இயல்பாக அமைந்தவை. படிமுறைப் பயிற்சி பெறும் தன்மை அவைகளுக்கு இயல்பாக இருக்கிறது. இதனை இறைவன் தன் வல்லமையால் மாற்றினால், உயிர்களை அழித்ததாகுமே அல்லாமல் அவைகளுக்கு நன்மை செய்ததாக ஆகாது. இறைவனுக்குத் தன் வல்லமையை நாட்டுவது குறிக்கோள் அன்று; அவனுக்கு அது தேவையும் அன்று; உயிர்களுக்கு நலம் செய்வதுதான் அவன் கருத்தாக இருக்க முடியும். தனக்கென ஒரு தேவையும் இல்லாத இறைவனுக்கு, எல்லாம் வல்லமை என்பது உயிர்களின் நலம் குறித்ததாகவும் உயிர்களின் தன்மைக்கேற்பத் துணைபுரிவதாகவுமே அமைய முடியும். இதனை எல்லாம் வல்லமை என்று சொல்லாமல் வெறுமனே "வல்லமை" என்று சொல்லக்கூடாதா? எனக் கேட்கலாம். உயிர்கள் எண்ணிறந்தவை. ஒவ்வோர்

உயிரும் அதன் அதன் தன்மைக்கேற்ப முன்னேறி இறுதியில் பேரின்பப் பெரும்பயனை நுகருமாறு செய்வதற்கு எத்தனையோ வகையான உடல்களையும், உலகங்களையும் படைத்தளிக்க வேண்டும். உயிர்களின் படிமுறை முன்னேற்றத்திற்கு என்னென்ன தேவையோ அவை அத்தனையையும் குறைவின்றிச் செய்து கொடுக்க வேண்டும். உயிர்களின் செயல்களுக்கேற்றவாறெல்லாம் வினைப்பயன்களை ஊட்டி அவை தப்பாமல் முன்னேறி நலம்பெற வழிவகைகள் செய்யவேண்டும். இவ்வளவையும் செய்யும் இறைவனின் வல்லமையை வெறுமனே "வல்லமை" என்று சொன்னால் எங்ஙனம் பொருந்தும்? இதனால்தான் அதனை "எல்லாம் வல்லமை" என்று சொல்லுகிறோம்.

உலகில் காணப்படும் தீமைக்கும் துன்பத்திற்கும் ஆணவமலமே மூல காரணம். இம் மலத்தை இறைவன் உண்டாக்கவில்லை. இஃதும் அநாதிப் பொருளே. அநாதிப் பொருள் நித்தியமாதலால் அதனை அழிக்க முடியாதென்னும் சமாதானம் இறைவன் எல்லாம் வல்லவன் என்று சொல்லும் போது வலிஇழந்து போவது உண்மையே. ஆனால் உயிர்களின் படி முறை முன்னேற்றத்திற்கு இம்மலம் அவசியம் வேண்டும் என்பதாலேயே இறைவன் இதன் இருப்பிற்கு இடம் அளித்திருக்கிறான் என்னும் கருத்தை ஈண்டுச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். உயிர்களின் துன்பத்தை இறைவன் அறியாதவன் அல்லன். ஆனால் இத்துன்பத்தால் உயிர்கள் இறுதியில் நன்மையே அடையும் என்பதை முற்றறிவுடைய அவன் நன்கு அறிந்திருக்கிறான். எனவே அவன் நம்மைப்போலக் கலக்கம் அடையாமல் செயலாற்றுகிறான். இறைவன் முற்றறிவினனாக இல்லாதிருந்தால், உயிரின் துன்பம் கண்ட கணமே தீமையை ஒழித்திருப்பான். உயிரின் முன்னைய நிலையையும் இப்போதைய நிலையையும் இனி எய்தப்போகும் நிலையினையும் திட்டவட்டமாக உடனேயும் ஒருங்கேயும் அறியும் முற்றறிவு இறைவனுக்கு இருப்

பதால்தான் தீமையைக் கண்டு கலங்காமல் அதன் அவசியத்தை உணர்ந்து ஒழிக்காமல் விட்டுவைத்திருக்கிறான்.

தீமையை விட்டுவைத்திருக்கும் இறைவனை எங்ஙனம் எல்லையில் கருணை உடையவன் என்று கூறமுடியுமா? தீமையால் நமக்கு நன்மையே விளையும் என்பதையும அத்தீமை நம் முன்னேற்றத்திற்கு அவசியம் என்பதையும் உணர்ந்து, அத்தீமையினுள் நாம் ஆழ்ந்து மூழ்கிப் போகாமல், படிமுறையே பயிற்சி பெறவும் பெறும்போதே பல்வகை இன்பங்களைத் துய்க்கவும் ஒவ்வொரு கணமும் துணை செய்யும் ஒருவனை நம்மால் அவனுக்கு எந்தப்பயனும் இல்லாதிருந்தும் நமக்குத் துணை செய்ய வேண்டிய தேவை எதுவும் இல்லாதிருந்தும் நாம் கேளாமலே நம்மை உய்விக்கச் செயலாற்றும் ஒருவனைக் கருணை உடையவன் என்று சொல்லாமல் பின் எப்படிச் சொல்வது? "கருணை உடையவன் என்று சொல்லலாம், ஆனல் எல்லையில் கருணை உடையவன் என்பது எப்படிப் பொருந்தும்?" எனக்கேட்கலாம்?

எத்தனை முறை நாம் வழுக்கி வீழ்ந்தாலும், எத்தனை தடவை நாம் அவனை உதறித்தள்ளினாலும், எவ்வளவுதான் நாம் அவனை இகழ்ந்தாலும், சலிப்போ, வெறுப்போ, சினமோ எய்தாமல் இடையறாது துணைசெய்து இறுதியில் நமக்குப் பேரின்பப் பேற்றைத்தந்தே தீரும் இறைவனை எல்லையில் கருணை உடையவன் என்று சொல்லாமல் பின் எப்படிச் சொல்வது?

திரு. தேஷ்பாண்டே தீமை இருப்பதால் இறைவன் இம் மூன்று தன்மைகளையும் ஒருங்க உடையவனாக இருக்க முடியாது என்று கூறுகிறார். ஆனல் நாமோ இறைவன் இம் மூன்று தன்மைகளும் ஒருங்கே உடையவனாக இருப்பதால் தான் தீமை இருக்கிறது என்று சொல்கிறோம். இறைவன் எல்லாம் வல்லவனாக மட்டும் இருந்தால் தீமைக்குக் காரணமாகிய ஆணவமலத்தை இல்லாமற் போகும்படி உடனே ஒழித்திருப்பான்; அல்லது எல்லையில் கருணை உடையவனாக மட்டும் இருந்தாலும் அதனை உடனே

ஒழித்திருப்பான். அவன் எல்லாம் வல்லவனாகவும் எல்லையில் கருணை உடையவனாகவும் எல்லாம் அறிபவனாகவும், ஒருங்கே இருப்பதால்தான் ஆணவமல இருப்பினை ஒழிக்க முடியாதவனாகின்றான். இம் முடியாமையே இறைவன் எல்லாம் வல்லவனாகவும் எல்லையில் கருணை உடையவனாகவும் எல்லாம் அறிபவனாகவும் ஒருங்கே இருக்கின்றான் என்பதை உறுதிப்படுத்துகின்றது. "ஆணவமல இருப்பினை" இறைவன் ஒழிக்க முடியாதவனாகின்றானே அன்றி நம்மை ஆணவ மலப் பிடிப்பினின்றும் விடுவித்து விடுகின்றான் என்பதை மறந்துவிடக் கூடாது.

இங்ஙனம் தர்க்க ரீதியாகத் திரு. தேஷ்பாண்டே அவர்களை மறுத்துக் "கடவுளால் முடியாத செயல்கள்" என்னும் தலைப்பில் "சித்தாந்தம்" இதழில் ஒரு கட்டுரை எழுதினேன்.

இக்கட்டுரையையும் இன்னும் சைவசித்தாந்த நுணுக்கங்கள் பலவற்றை விளக்க நான் "சித்தாந்தத்திலும்" வேறு இதழ்களிலும் எழுதிய கட்டுரைகள் சிலவற்றையும் தொகுத்து அண்மையில் புன்செய்ப் புளியம்பட்டி மறைமலை அடிகள் மன்றத்தினர், "கடவுளால் முடியாத செயல்கள்" என்னும் பெயரில் ஒரு நூலினை வெளியிட்டுள்ளனர். சைவ சித்தாந்திகள் நூலின் தலைப்பினைக் கண்டு மிரள்வதாகக் கேள்விப்பட்டேன். "தர்க்க பாஷை" சைவசித்தாந்திகளுக்குத் தண்ணீர் பட்டபாடு என்பதைச் சொல்லவேண்டுவதில்லை. எனவே இத்தலைப்பைக் கண்டு அவர்கள் மிரள்கிறார்கள் என்பதை என்னால் நம்பக்கூடவில்லை.

1968 டிசம்பரில் நடைபெற்ற சமாஜ மாநாட்டுக்குச் "சித்தாந்தம்" ஆசிரியர் திரு. மு. அருணாசலம் M. A. அவர்கள் வந்திருந்தார்கள். "தங்கள் நூலை முழுவதும் படித்துப்பார்த்தேன்; மறுபடியும் படிக்கவேண்டுமென்பதற்காக என் மேஜையிலேயே வைத்திருக்கிறேன்; சைவ சித்தாந்த நுணுக்கத்தினை அறிய விரும்புபவர்கள் அவசியம்

படிக்க வேண்டிய நூல்" என்று அவர்கள் என்னிடம் சொன்னார்கள். அப்பொழுது பக்கத்திலிருந்த அன்பர் கடலூர் திரு தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்கள், திரு. அருணசலம் அவர்கள் இப்படிச் சொல்வதென்றால் அது வசிட்டர் வாயால் பிரமரிஷி பட்டம் பெற்ற மாதிரிதான்; இதனைவிட வேறு மதிப்புரை தங்கள் நூலுக்கு வேண்டியதில்லை" என்று கூறினார்கள். இதற்குமேல் என் நூலைப் பற்றி நானே எழுதுவது பொருத்தமாகாது. இங்கே எடுத்துக்காட்டியதைவிட இன்னும் விரிவாக நூலில் சைவ சித்தாந்த நுணுக்கங்கள் பலவற்றை எளிய நடையில் யாவர்க்கும் புரியும் வண்ணம் விளக்கியிருக்கிறேன். மறைமலை அடிகள் மன்றத்தினர் இதனைச் சைவப் பணியாகக் கருதி வணிக நோக்கம் இன்றிக் கிட்டத்தட்ட அடக்க விலைக்கே வெளியிட்டிருக்கின்றனர். சித்தாந்த நுணுக்கங்களை அறிய விரும்புவோர் அவர்களுக்கு எழுதி நூலினைப் பெற்றுப் படித்துப் பார்க்குமாறு வேண்டுகிறேன்.

நூலின் பெயர்: "கடவுளால் முடியாத செயல்கள்"
விலை ரூ. 2-00
கிடைக்குமிடம்: மறைமலை அடிகள் மன்றம்,
1/13, இராசாத் தெரு,
புஞ்செய்ப்புளியம்பட்டி P. O.
ஈரோடு வழி, கோவை மாவட்டம்.

அப்பர் வாக்கு

(மா. ப தியாகராஜன், பி. ஏ.)

விறகில் தீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுக் கோல்நட்டு உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே.

என்று பாடியருளியுள்ளார் அப்பர் பெருமான். இங்கு பாலிலிருக்கப்பட்ட நெய்யை வெளிப்படுத்துவதற்கு மத்தினுல் கயிறு கொண்டு கடைவது போல, மறைந்துள்ள சிவபெருமான் முன்னிற்க வேண்டுமெனின், உறவாகிய மத்துக்கோல் நாட்டு உணர்வெனும் கயிற்றினுல் கடைய வேண்டுமென்று கூறுகிருர்கள். சிவபெருமானுக்கும் ஒரு உறவை, அம்மையாகவோ, அப்பனுகவோ, நாதனுகவோ, மைந்தனுகவோ, தோழனுகவோ ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அதற்கேற்ற உணர்வுடன் அவனை வழிபடல் வேண்டும். அவ்வுணர்ச்சி மாருது அவனை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும், எழுந்து கொண்டிருக்குமாயின் அவன் அவ்வண்ணம் நம்முன் எதிர்ப்படுவான். இது பக்திமார்க்கம்.

இதையே யோகமார்க்க பரமாகப் பொருள் கொள்வோமாயின், வாசுகி என்னும் பாம்பைக் கயிருகக் கொண்டு மந்தர மலையை மத்தாக வைத்து பாற்கடலைக் கடைந்த புராண கதை உவமையாகக் காணப்படும். மந்தரமலை என்பது மந்திரமாகும். வாசுகியென்னும் பாம்பு நாம் சுவாசிக்கும் வாசியாகும். பாற்கடல் என்பது ஆகாய வெளியேயாகும். மந்திர ஜெபமே கடைதலாகும். உச்சுவாச நிச்சுவாசத்துடன் ஜெபிக்கும் மந்திரம் ஒலி அலைகளை ஆகாயத்தில் பரப்பி உருவத்தை அமைப்பதாகும். விஞ்ஞான முறையிலும் ஒலிக்கு உருவம் அமைவதைக் காட்டப்படும்.

ஏனைய இரண்டு உவமைகள் விறகில் தீமறைந்து கிடப்பதை வெளியாக்கு முறைமையையும், மாமணியினின்று ஒளி வெளிப்படும் முறைமையையும் விளக்கவில்லையே என்று எண்ணலாம். விறகில் தீவெளிப்படுமாயின் விறகு எரிந்து விடும். உயிர்க்குயிராயுள்ள சிவம் வெளிப்படின் உயிர் கெடுவதில்லை. மணியில் ஒளி விளங்க விளங்க மணியின் உருவம் மறைந்துவிடும். மணியும் ஒளியை யறியாது. ஒளியும் மணியையறியாது.

பாலிலுள்ள வெண்ணெய் வெளிப்படில் பால் மோராகத் திரிந்து விடும், வெளிவந்த வெண்ணெயைத் தாங்கிநிற்கும். இயமானன் முன், தொழிலாளி அடங்கித் தொழில் புரிவான்.

இயமானன் இல்லாதசமயம் தொழிலாளி தானே முதலாளி போல் நடந்து கொள்வான். உயிரினின்றும் சிவம் வெளிப் பட்டு விளங்கும் போது உயிர் அடிமைத்திறம் எய்தும். இயல்பு மாறி விளங்குதலே மறைந்திருந்த சிவம் வெளிப் பட்டதின் பயனாகும்.

இன்னொரு பாடலில் அப்பர் பெருமான் கூறுவதாவது:-

கன்மனவீர் கழியுங் கருத்தே சொல்லிக் காண்பதென்னே
நன்மனவர் நவில் தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்
பொன்மலையில் வெள்ளிக் குன்றது போலப் பொலிந் திலங்கி
என்மனமே யொன்றிப் புக்கனன் போந்த சுவடில்லையே.

இப்பாடலிலிருந்து நாம் தெரியக்கிடப்பது யாதெனின், சிவன் புறத்திலிருந்து உள்புக்கனன் என்று கூறுமா போன்றுள்ளது. இதேபோல் திருஞான சம்பந்தரும் பாடி யருளியுள்ளார்.

அந்தம்ஆதி அயனும்மாலும் ஆர்க்கு மறிவறியான்
சிந்தையுள்ளும் நாவின்மேலும் சென்னியு மன்னினனால்
வந்தென் உளம்புகுந்து காலைமாலை யாடுவான்
கந்தமல்கு கானூர்மேய யெந்தை யெம்மானே

இதுபற்றியே பொதுவாக "மறைய நின்றுளன்" என்று அப்பர் கூறியுள்ளார். புறத்தே மறைந்து நிற்கின்றனா அல்லது அகத்தே மறைந்து நிற்கின்றனா என்று கூறாமல் "மறைய நின்றுளான்" என்று மட்டும் கூறியுள்ளார். ஈண்டு, திரு சுந்தரமூர்த்தி சுவாமிகள் சங்கிலியாருக்கு வாக்களிக்கும் போது ஒற்றியூர்ப் பெருமான் மகிழ மரத்தடியிலிருந்ததாக அவருடைய சரித்திரம் கூறுவதை, எண்ணிப்பார்க்க வேண்டும். மற்றும் திருஞானசம்பந்தர் சிவபெருமான் திரு வெள்விக்குடியில் இரவிலும், பகலில் திருத்துருத்தியிலும் இருப்பதாகப் பாடியருளியுள்ளார். சிவபெருமான் எங்கும் நிறைந்த பரம் பொருளெனினும், அவன் எங்கெங்கு உணரப் படுகிறானோ ஆங்காங்கு அவன் இருப்பதாகக் கொள்ளப் படுகிறது. உள்ளும் புறம்புமாய் விளங்கும் சிவபெருமானை

அடியவர்கள் சில சமயம் உள்ளத்தேயும் சில சமயம் புறத்தேயும் சில சமயம் உள்ளும் புறம்புமாய் நிலவுவதையும் உணர்ந்து பாடியருளியுள்ளார்கள்.

மற்றும் இதில் ஒரு சிறந்த சைவசமய தத்துவம் அடங்கியுள்ளது. கண்ணில் ஒளியிருக்கின்றதனுல் சூரிய ஒளியால் விளங்கும் பொருள்களை நாம் காண்கிறோம். கண்ணில் படலம் (cataract) படருமாயின் பொருள்களைப்பார்க்க முடிவதில்லை. சூரியன் ஒளி மறைந்துவிடுகின்றது. சூரியன் மறைய நின்றுளான் என்று தான் கூறவேண்டும். அதுபோல உயிரை ஆணவமலம் படர, உயிரின் அறியும் ஆற்றல் குன்ற, சிவபெருமான் காணமுடியாமல் "மறைய நின்றுளான்." ஆணவ வளர்ச்சி திரைபோல் மறைக்கிறது. சிவபெருமான் அறிவுப் பொருளானபடியால் அத்திரையை அகற்ற கன்மத்தையும் மாயையும் கூட்டுவிக்கின்றான். நாம் ஊனக் கண்ணினுல் பார்க்கும் சூரியனும் பொருள்களும் சடப் பொருள்கள். ஆதலால் நம்கண்ணில் படலம் படரின் அதை நாமே போக்கிக் கொள்ள வேண்டும். பொருள்கள் போக்கா. கண் பார்வை யெனும் கன்மத்திலீடுபடும்போது அழுக்கு சேர்வது போல உயிர் உலகத்தை அறிய முற்படுதலால் ஆணவமான அழுக்குத்திரை வளர்கிறது. இறைவனை அடைய முற்படின் அவன் அத்திரையை அகற்றுவான். சிவபெருமான் மறைய நின்றுளான் என்பது ஆணவத் திரையாலெனக் கொள்ளல் வேண்டும். சூரியனை மேகம் மறைத்தாலும் அவனுடைய ஒளியைக் காண்கிறோம். அது போல சிவபெருமானுடைய வடிவம் ஆணவத்திரையால் மறைக்கப்பட்ட போதிலும் அவனருளாக்கத்தை உயிரனுபவித்துக் கொண்டுதான் உள்ளது.

திருவலங்கற்றிரட்டு

(வித்துவான் அம்பை. இரா. சங்கரனுர்)

பாம்பன் குமர குருதாச சுவாமிகள் பற்றிச் சைவவுலகம் நன்கறியும். அப்பெருமானுர் நம் அண்மைக் காலத்துத் தோன்றி (1850—1929) முருகனருள் கைவரப்

பெற்ற சிறந்த முனிபுங்கவராவர். அவர் அருளிச் செய்த பாடல்கள் 6666 ஆகும். அவற்றை ஆறு மண்டலங்களாக அடிகளாரே வகுத்தருளியுள்ளார்கள். ஆறுமுகப் பெருமானுக்கு ஆறு மண்டலங்களாக அவன் பொருள் சேர்புகழைத் துதித்துயிர்களுய்ய 6666 பாக்களாகப் பாடியருளிய அடிகளாரின் நுண்ணறிவின் பெருமையை எவ்வாறு போற்றிப் புகழ்வது? அப்பாக்களுள் இத்திருவலங்கற்றிரட்டு இரண்டாவது மண்டலமாக முறைப் படுத்தப்பட்டுள்ளது. இதனை இரண்டு கண்டங்களாகப் பிரித்து அடிகளார் அருளியுள்ளார்கள்.

திரு என்பது தெய்வத்தையும் அலங்கல் என்பது மாலையையும் குறிக்கும் ஆகவே திருவலங்கற்றிரட்டு என்பது தெய்வத்திற்குச் சூட்டும் பெருமை வாய்ந்த பாக்களாகிய மாலையின் தொகுதி என்பது பொருளாகும். அவற்றுள் முதற்கண்டத்தில் 601 பாடல்களும் இரண்டாவது கண்டத்தில் 532 பாடல்களுமாக மொத்தம் இந்நூலில் 1133 பாக்கள் அடங்கியுள்ளன.

சுவாமிகளின் பாம்பன் பதியைச் சேர்ந்த L. D. முத்துக் கருப்ப பிள்ளை என்பவர்கள் தேவார திருவாசகம் ஆகிய திருமுறைகள் போன்று பண்ணோடு பாடவல்லதாய் முருகப்பெருமான் மீது பாடல்களிருந்தால் நல்லதென வேண்டியதன் பேரில் 1892 ஆம் ஆண்டு (நந்தன மார்கழி 24ஆம் நாள்) இந்நூலைப் பாடத் தொடங்கினதாகத் தெரிகிறது.

இந்நூலின் முதற்கண்டத்தில் 58 பதிகங்கள் உள்ளன. அப்பதிகங்களில் 20 பண்கள் இடம்பெற்றுள்ளன.

சுவாமிகள் சைவத்திருமுறைகளிடத்து எவ்வளவு தோய்ந்திருந்தார்கள்? அப்பண்களைப் பாடுவதில் எவ்வளவு இசைப்புலமை யுற்றிருந்தார்கள் என்னும் பல சிறப்புகளை இந்நூலிலிருந்து தெற்றென வுணரலாம்.

இந்நூலில் காணப்பெறும் பண்களும் அவை தோன்றும் பதிகங்களும் வருமாறு :—

1)	பஞ்சமம்	8	பதிகங்கள்
2)	நட்டராகம்	7	,,
3)	பழம் பஞ்சுரம்	7	,,
4)	இந்தளம்	7	,,
5)	கௌசிகம்	5	,,
6)	நட்டபாடை	3	பதிகங்கள்
7)	சாதாரி	3	,,
8)	கொல்லி	2	,,
9)	கொல்லி கௌவாணம்	2	,,
10)	தக்கராகம்	2	,,
11)	தக்கேசி	2	,,
12)	தாண்டகம்	2	,,
13)	மேகராகக் குறிஞ்சி	1	பதிகம்
14)	சீகாமரம்	1	,,
15)	யாழ்மூரி	1	,,
16)	வியாழக் குறிஞ்சி	1	,,
17)	பியந்தைக் காந்தாரம்	1	,,
18)	காந்தார பஞ்சமம்	1	,,
19)	புறநீர்மை	1	,,
20)	காந்தாரம்	1	,,
	மொத்தம்	58	பதிகங்கள்

இம் முதல் கண்டத்திலுள்ள பதிகங்கள் எவ்வெப்பொழுது பாடப்பட்டன என ஆண்டு, மாதம், தேதியும் அவ்வப் பதிக அடியில் குறிப்பிட்டிருப்பது வரலாற்று உணர்வுக்குப் பெருவிருந்தாயமையும். சுவாமிகள் தாம் எழுதிய எல்லா நூல்களிலும் காலத்தைக் குறித்துச் செல்லும் வழக்கத்தை மேற்கொண்டிருத்தலை யாண்டும் காணலாம்.

அடிகளார் திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் பாடியருளிய மிகக் கஷ்டமாய யாழ்மூரிப் பதிகத்தைப் போன்று இந்நூலுள்ளும் முருகப்பெருமான் புகழ்குறித்துப் பாடியிருப்பது கூர்ந்து கவனிக்கத்தக்கது. மேலும்

தாண்டகம் போன்ற யாப்பமைதிகளிலும் பாடல்களை மிக அழகாகப் பாடியுள்ளார்கள். அவை பாடி மகிழ்தற் குரிய நிலையிலுருக்கம் வாய்ந்தவையாயுள்ளன.

நம் தெய்வத் தமிழ்த் திருமுறைப் பதிகங்களின் பண் களைப் பாடும் பேற்றினில் திறமையுற்றோர் இத்திருவலங் கற்றிரட்டிலுள்ள பண்களையும் பாடின சிறிதும் மாறு படாமல் இப்பண்கள் திருமுறைகளோடு ஒத்திருக்கும் உயர்நிலையை நினைந்து நினைந்து இன்புறுவது திண்ணம். இதிலிருந்து சுவாமிகளின் இசைப் புலமையினுட்பம் இனிது விளங்கும். சுவாமிகள் இப்பதிகங்களின் தலைப் பில் அவ்வப் பதிக ஊர்பற்றியோ அல்லது அப்பதிக நுதலிய நுண்பொருள் அல்லது உட்கிடையையோ தலைப் பாகத் தந்துள்ளார்கள்.

இம்முதற் கண்டத்தில் முருகனிடம் அடிகளார் வேண்டும் நிலை மிகவும் படித்தின்புறற்பாலது. விரிக்கிற் பெருகும். இருப்பினும் இரண்டொன்று சான்றாகக் காட்டி அமைவல்.

சுவாமிகள் கற்றுத் துறைபோய பெருமகனார். இருப் பினும் புலமைச் செருக்குச் சிறிதும் அற்றவர். பெருமான் பெருமையையும் தம் எளிமையையும் நினைந்து நினைந்து அவனை வழிபடும் நிலையைக் கீழ்வரும் பாடலில் காணலாம்.

திருவாவினன்குடி—பண்—பழம்பஞ்சுரம்.

பேயினுங் கடையேன் பிணத்தினுந் தீம்ப்பேன்
பிறங்குகுற் குணமெது மில்லேன்
நாயினுங் கடையே னலனுற வெனநீ
நறுநெறி குயிற்றிய வருளாம்
நேயநல் வரவுக் கொருகர மாறித்
நெடுநிலப் பரப்பிடை யுண்டோ
ஆயத வயில்வேற் குருபர வெனையா
ளப்பனே யொப்பிலா தவனே,

பிரப்பன் வலசை என்னும் பதியில் சுவாமிகளுக்கு முருகப்பெருமான் அருள் செய்திறம் இப்பதிகப் பாடலுள் காணலாம்.

பிரப்பன் வலசை—பண்—சாதாரி.

தஞ்சமென நிற்பவர்க ளஞ்சன்மி
　　னெனச்சொலுரை தந்த ருள்புரி
நஞ்சிவ பிரானெனு மயூரமுரு
　　கையரடி நண்ணி யுழலும்
நெஞ்சினை யொடுக்கியிர வும்பகலு
　　நின்றவன முள்ள வளமே
விஞ்சிய பிரப்பன்வல சைப்பதி
　　யிதாமடமை விட்ட மனதே.

தேவாரத்தில் பல பதிகங்கள் எண்ணலங்காரம் பொருந்த வந்துள்ளன நிலை போன்று சுவாமிகள் தம் நூலிலும் பாடியுள்ளார்கள். ஒரு சான்று காட்டுதும்.

எண்ணலங்காரலகரி—பண்—இந்தளம்.

ஆரு மவ ரானன மென்றறைதல்
ஆரு மவ ருண்ட முகைச்சியரெண்
ஆரு மவர் முக்கிய மாலதலம்
ஆரு மவர் மந்திர வக்கரமே.

இப்பாடலைப் போன்று ஒன்று முதல் பத்து முடிய ஒரு பதிகம் முழுவதும் பொருந்தி வரப் பாடியுள்ள திறம் பாடி மகிழ்தற்குரியது.

முருகப் பெருமானுக்குத் திருப்பல்லாண்டில்லை என்று மனத்தில் எண்ணி அக்குறையையும் போக்கிய பெருமை நம் அடிகளாரையே சாரும்.

திருக்கந்தர் திருப்பல்லாண்டு—பண்—பஞ்சமம்.

அன்னையின் மேம்படு கருணையி
　　னற்குக னடிகளைப் புகழ்தாசன்
தன்னைமெய் யடியவ னுக்கவென்
　　றகம்புறஞ் சார்ந்துவந் தேற்றமதி

சொன்னவ ருயனு பூதிசொன்
னவற்குறு சூரறுத் தெவராலும்
பன்னவொ ணுநல நல்கிய
குகனுக்குப் பல்லாண்டு கூறுதுமே.

இவ்வாறு இம் முதற்கண்டப் பெருமை பற்றிக் கூறிக் கொண்டே செல்லலாம். இருப்பினும் பானை சோற்றுக் குப் பதஞ் சிறிது காட்டினுற் போன்று கூறி அமைவாம்.

இந்நூலின் இரண்டாங் கண்டத்தில் யாப்பிலக்கண விகற்பங்கள் பலவற்றிற்கும் எடுத்துக்காட்டுகள் போல 532 பாக்களை அடிகளார் பாடியருளியுள்ளார்கள். பிற் காலத்தார் பாடிய செய்யுட் கோவையைப் போன்று இந்நூல் அமைந்துள்ளது என்று சுருங்கக் கூறலாம். எனினும் சுவாமிகள் இக்கண்டத்திற்குப் பல்சந்தப் பரி மளம் என்னும் பெயர் கொடுத்து நம்மை மகிழ்வூட்டுகின் ருர்கள். மேலும் இக்கண்டத்துள் சித்திரக்கவி, சந்தக் கவி முதலிய பல பகுதிகளுள்ளும் பல பாக்கள் இடம் பெற்றிருக்கின்றன. அவ்வப்பகுதிப் பாக்களுக்கு யாப் பிலக்கண முறைப்படி விளக்கமும் கொடுத்திருப்பது மிகவும் சிறப்பாயமைந்துள்ளது.

இப்பாடல்கள் யாப்பு விகற்பங்களைக்கூற வந்ததா யினும் இப்பகுதியிலிருந்து சுவாமிகளின் பல்துறைப் புலமை தெற்றென விளங்குவதுறுதி. இறைவணக்கப் பாடல்கள், இறைவனுண்மையை வலியுறுத்தும் பாடல் கள், அறிவுரைப் பாடல்கள் முதலிய பல்வேறு துறை களில் இக்கண்டப்பாக்கள் அமைந்துள்ளன. அவைகளைப் படிப்பதால் இம்மைக்கும் மறுமைக்கும் பயன் எய்துவர்.

யாவு மறந்திடு போதமே
நாளும் வளர்ந்த பல்காமரால்
ஈவு மிகுந்திழி பேய்மன
மென்ன மருண்டலை யுந்தமை

மேவ நிரந்தரம் வைத்தெலா
மிச்சை யெனத் தெரிவாருயர்
ஆவி நிறைந்தொளிர் சோதியே
யன்பி னெனக்கருள் சாமியே

என்பன போன்ற பல வணக்கப்பாடல்களை இக்கண்டத்துள் யாண்டுங் கண்டு மகிழலாம்.

நற்குண்டர் கேண்மையு ஞானமும் வாய்மையும்
அற்பர்கட் கின்பமா யாராவே—சிற்சபையுற்
றுய்யவொரு சேய்நோன் புஞற்றுநர்க் காருமிது
மெய்மெய்மெய் மெய்மெய்மெய் மெய்.

என்பது போன்ற பாடல்கள் இறைவனுண்மையை வலியுறுத்துவதோடு அவனை வழிபடுவதன் இன்றியமையாமையையும் விளக்கவல்லனவாயுள்ளன.

எவரம் பரத்தை படைபொருட் டுப்பொழிக்கின்றனரோ
அவரம் புவிக்கு ளடையா ரவத்தைக ளங்ஙனமே
துவரம் பருப்புண் டிடின்வயிற் றிற்புழுத் தோன்றுமிந்த
விவரம் பழக்கத் தறிந்து சொன்னேன்குரு வேட்கையரே.

இப்பாடலால் உப்பு அதிகமாகச் சாப்பிடக்கூடாது என்பதையும் துவரம் பரப்பு அதிகம் உண்டால் வரும் கேடுபற்றியும் சுவாமிகள் கூறுகின்றார்கள்.

எண்ணெய் வீவுறநாளில் வாதையியும் ஆநெய்யும்
வெண்ணெய் பாலும் மிக்கவுண்ணின் விந்து வூறியே
பெண்ணை நேட நேரு மென்று பெட்பி லாதினி
துண்ணு சீரி யோர்பி ரானெ னுட்ப வேலனே.

இப்பாடலால் எண்ணெய் அதிகம் பயன்படுத்தின் மரண வேதனைக்காளாகும் நிலைபெறுவர் என்பதையும் பசுநெய், வெண்ணெய், பால் முதலிய கொழுப்புப் பொருள்களை அதிகமாக உண்டால் காம நோயால் வருந்த

நேரிடுமென்பதையும் அங்கை ஆமலகமொப்ப எடுத்துக் கூறியருளிய திறம் படித்துப் பாடத்தின்புறற்பாலது.

இச்சையொழித் தேசிவிளம் பூரணனுக் காட்படுதல்
நிச்சயசன் யாச நிலையறியாப்—பிச்சரெல்லாம்
நீண்டசடை முண்டனமாய் நீறுமணி காவியுடை
பூண்டறையும் யாவுமுழுப் பொய்.

இப்பாடலிலிருந்து உண்மைத் துறவு எத்தகைத்தாயிருக்க வேண்டும். போலி வேடதாரிகளின் நிலைபற்றிய விளக்கங்கள் யாவை என்பது பற்றிக் கூறி உண்மையில் பெருமானை அடையும் வழியையும் கூறுகிறார்.

இதுபோன்ற பல சிறப்புக்களை இக்கண்டத்துள் காணலாம்.

மேலும் பாம்பன் சுவாமிகள் நம் சைவ சமயப் பரமாசாரியப் பெருமக்கள் போன்று நம் தமிழகத்திலுள்ள பல ஊர்களுக்கும் சென்று அங்கங்குள்ள மூர்த்தி, தலம், தீர்த்தங்களைத் தரிசித்தே நன்னிலையுற்றிருக்கின்றார்கள். இந்நூலின் பிற்சேர்க்கையாகத் தாம் பல தலங்களுக்கும் சென்று அங்கங்குள்ள மூர்த்திகளைத் தரிசித்த தன்மையினையும் பிறவற்றையும் விளக்கமாகப் பாடியுள்ளார்கள். அவ்வாறு 35 பாக்களுள்ளன. அவற்றைப் படித்துப் பார்த்தால் சுவாமிகள் அவ்வப்பதிகளில் பட்ட பல அனுபவங்களைத் தெற்றென உணரலாம்.

எடுத்துக் காட்டாக ஒன்றைக் காண்போம். நெல்லை மாவட்டத்தில் பொருனையாற்றின் கண்ணுள்ள பல தீர்த்தங்களுள் சிறந்தது பாண தீர்த்தம் என்பதாம். அத்தீர்த்தத்தில் ஆட அடிகளார் நினைந்து அவண் சென்று தாம் பட்ட அல்லலை விளக்கியுள்ளார்கள்.

தேன்பட்ட வாய்வண் டறைவெற்பு
மேல்வாண தீர்த்தமதில்
ஊன்பட்ட காயந் தனையே நனைப்பான்
உவந்து சென்று

நான்பட்ட பாடுன் றிருவுள்ள
மொன்றே நனியறியுங்
கூன்பட்ட சோதிப் பிறைமுடித்
தோனிளங் கோமகனே.

"வாளைக் கொடுத்தாயினும் வாண தீர்த்தமாடு" என்பது அம்மாவட்டப் பகுதியிலுள்ளோர் கூறும் பழமொழி; அதற்கேற்பவே அடிகளார் பல பாடுபட்டு அங்கு நீராடியிருக்கிறார்கள்.

சுவாமிகள் சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் வளர்ச்சியில் மிகவும் ஆர்வம் கொண்டுள்ளவர்கள் ஆவர். அதனால் அதன் மேம்பாடு கருதி வாழ்த்திய பாவொன்றும் இப் பிற்சேர்க்கையிலிடம் பெற்றிருக்கின்றது.

எழுத்துறை மேனா ளனிபுக
ழெம்மா னெனுங்குக நின்
வழுத்ததர் நிற்குமென் முன்சென்னை
வாழுநின் மாண்படியைத்
தொழத்தகு மன்பர் தெரிவித்த வாறுன்
றொடர்பி னின்னுந்
தழைக்குக நற்சைவ சித்தாந்த வேதத்
தமிழ்ச் சபையே.

இவ்வாறெல்லாம் தாம் துன்புற்று இறையருளைப் பெற்று நம்மவர்பால் கருணைத் திறங்காட்டித் தாம்பெற்ற இன்பத்தை வாரி வழங்கும் அடிகளாரின் வள்ளற்றன்மையை உள்ளுதொறும் உள்ளம் சிலிர்க்கின்றது. அப்பெருமானருளிச் செய்த இப்பாக்களைப் பாடி மகிழ்ந்து முருகப்பெருமானருள் குறித்துப் பாடுவதையே பணியாக் கொண்டு மக்கள் சிறந்தால் அம்முனிபுங்கவரின் பணி பயன்பெற்றதாகக் கருதப்படும்.

ஆகவே மக்கள் யாவரும் இத்திருவலங்கற்றிரட்டினையும் மற்றும் குமர குருதாச சுவாமிகள் அருளிச் செய்த

பாடல்களையும் பாடி இம்மையின்பமும் மறுமையின்பமும் பெற்றுய்வார்களாக. அதற்குச் திருச்செந்தில் மேய வள்ளிமணாளன் இன்னருளும் கூட அருள்பாலிப்பதாகுக.

வாழ்க குமர குருதாச சுவாமிகள் புகழ்.

பொன் மொழிகள்.

கொ. நீ. சி.

சார்லஸ் பியர்ட் (Charles Beard) என்ற சரித்திராசிரியர் தன் வாழ்க்கையில் கண்ட உண்மைகளைப் பின்வரும் சூத்திரங்களில் சுருக்கிக் கூறுகின்றார் :–

(1) யாரொருவனைக் கடவுள் அழிக்க நினைக்கின்றாரோ அவனுக்குக் கடவுள் அவன் நிதானம் இழக்கும் அளவுக்கு ஆற்றல் தருகின்றார்.

(2) இறைவனுடைய இயந்திரம் அமைதியாகவும் மெதுவாகவும் அரைக்கின்றது; ஆனால் அரைக்கப்படும் பொருள் மிகவும் பொடிப் பொடியாக அரைக்கப் படுகின்றது.

(3) தேனீ தன் களவுக்கு உட்பட்ட மலர்களைக் கருத் தரிக்கச் செய்கின்றது.

(4) வானம் போதுமான அளவுக்கு இருளடைந்தபோது தான் விண்மீன்கள் தோற்றமளிக்கின்றன.

இச் சொற்றொடர்கள் சிந்திக்கச் சிந்திக்கப் பொருள் தரும். அவற்றைப் பின்வருமாறு விளக்கலாம்:-

(1) முதற் சொற்றொடருக்கு, உதாரணம் புராணத்தில் இராவணன், சரித்திரத்தில் ஹிட்லர். சிறு பதவிகள், அதிகாரங்கள் பெற்றவர்களும் நிதானம் இழந்து வீழ்வதுண்டு.

பின்வரும் குறட்பாக்களை ஓர்க:-

அமைந்தாங்கு ஒழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாம் தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

(2) பின்வரும் குறட்பாவை உன்னுக:-

எனைப்பகை உற்றாரும் உய்வர்; வினைப்பகை
வீயாது பின்சென்று அடும்.

வினையைக் காலமும் பக்குவமும் அறிந்து ஊட்டு கின்றவன் இறைவன். அவரை ஏமாற்ற முடியாது.

(3) சில நிகழ்ச்சிகள் தீமை போலத் தோன்றி நன்மை பயக்கும். யாரறிவார் நமது நன்மையும் தீமையும்? 'வேண்டத்தக்கது அறிவோய் நீ!'

(4) 'கருமேகத்தின் விளிம்பில் ஒளி மிளிரும்' என்ற வாசகமும் இக் கருத்துப் பற்றியே. துன்பம் அடுக்கிவரினும் நம்பிக்கையை இழத்தலாகாது என்பது கருத்து.

தமிழறிஞர் பாலூரார் மணிவிழா

நம் சமாஜச் செயற்குழு உறுப்பினரும் பழுத்த தமிழ்ப் புலமை பாலித்தவருமாகிய வித்துவான் செந்தமிழ்ச் செல்வர், சைவ சமய சிரோன்மணி, பேராசிரியர் பாலூர் கண்ணப்ப முதலியார் எம். ஏ., பி ஓ எல்., அவர்கள் மணிவிழா அண்மையில் நிகழ இருக்கின்றது. அவர் தமிழும் சைவமும் தழைத்தினி தோங்க அளப்பருந் தொண்டுகளாற்றிய அந்தணாளர். இளஞ்சிறார் முதல் முதியோர் வரை என்றும் படித்தற்குரிய பல்வேறு வகையான ஏறக்குறைய அறுபதுக்கு மேற்பட்ட நூல்களையும் எழுதி உதவிய உபகாரியாவர். இருபத்து மூன்று ஆண்டுகள் உயர்நிலைப் பள்ளியிலும் பதினாறு ஆண்டுகள் கல்லூரியிலும் தமிழ்ப் பணி புரிந்து தற்போது ஒய்வு பெற்றுத் தம் அறுபதாம் அகவையைக் கடக்கும் நிலையிலுளார்.

இந்நிலையில் அன்பர்கள் பலர் அவர்தம் சென்றகாலச் சிறப்புப்பணியை மனத்துட் கொண்டு அம் மணிவிழாவில் பொற்கிழி ஒன்று வழங்க நினைத்துள்ளனர். புலவர் போற்றும் இவ்வரியவாய்ப்பினில் பங்குகொள்ள விரும்புவோர் ஒல்லும் வகையானுதவி செய்ய வேண்டப்பெறுகின்றனர். அவர் மணிவிழா நினைவாக மலரொன்றும் வெளிவர இருக்கின்றது. மலரில் விளம்பரம் தந்தோ அல்லது பொருளுதவி செய்தோ எவ்வாற்றானும் பங்குபெறல் நன்று. பணமனுப்ப விரும்புவோர் மணிவிழாக் குழுத்தலைவர் மகா வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள், 36, முத்தியாலு செட்டித் தெரு, புரசைப் பாக்கம், சென்னை-7 என்னும் முகவரிக்கு இயன்றவாறு விரைவில் அனுப்பிவைக்க வேண்டுகின்றோம்.

மதிப்புரை

"குறள்நெறி வெண்பா" என்னும் நூல் வரப்பெற்றோம். இது காந்தியடிகள் நூற்றாண்டு விழா நினைவு வெளியீடாக வடார்க்காடு மாவட்டம் ஆரணி சைதாப்பேட்டையிலுள்ள இளங்கோ இல்லத்தினரால் வெளியிடப்பெற்றுள்ளது. இதன் ஆசிரியர் வித்துவான் கோ. இளையபெருமாள் ஆவர் (தலைமைத் தமிழாசிரியர், சுப்பிரமணிய சாத்திரியார் உயர்பள்ளி, ஆரணி.)

இந்நூலில் 100 வெண்பாக்கள் மிகவும் சிறந்த ஓசையமைதியுடனும் கருத்துச்செறிவுடனும் உள்ளன. இவ் வெண்பாக்களின் முற்பாதி காந்தியடிகள் தம் வாழ்வில் கைக்கொண்டிருந்த சிறந்த பண்பையும் பிற்பாதி அப்பண்பை வலியுறுத்திச் சிறப்பிக்கும் குறளினையும் கொண்டுள்ளன, வள்ளுவரின் இரண்டாயிரம் ஆண்டு விழாவினைக் கொண்டாடும் இற்றைஞான்று இந்நூல் வெளிப் போந்தது இன்னும் சிறந்துள்ளது என்பது வெள்ளிடைமலை. வள்ளுவர் அடியொற்றியே காந்தியாரும் தம் வாழ்வை வகுத்துக் கொண்டார் என்று கூறுவது போல இந்நூல் அமைந்திருப்பினும் பெரியோர்களுடைய சிறந்த கருத்துகள் தம்முள் ஒத்திருத்தல் வெளிப்படை என்ற சிறந்த உண்மையையும் இந்நூல் தெற்

றென உணர்த்துகின்றது. பல அறிஞர்களின் பாராட்டுரைகளும் இந்நூன்முதலில் இடம் பெற்றுள்ளன.

இலக்கண முறைப்படி பாடல்கள் இயற்றப் பெறவேண்டும் என்ற கடைப்பிடி தளர்ந்து வருகிற இக்காலத்தும் இந்நூலாசிரியர் பண்டைத் தமிழ்ச் சான்ருேர் போன்று மிகவும் சிறந்த முறையில் வெண்பாவினை இயற்றும் ஆற்றல் பெற்றவர் என்பதனை இந்நூலில் யாண்டும் காணலாம். இவர் முயற்சி சிறந்தோங்குவதாக. இந்நூலினை யாவரும் வாங்கிப் படித்து மேம்பட்டுத் திகழ்வார்களாக. கிரௌன் அளவு 24 பக்கம் கொண்ட இந்நூல் கிடைக்குமிடம்:-

இளங்கோ இல்லம்,
சைதாப்பேட்டை,
ஆரணி, வ. ஆ. மாவட்டம்.

வேண்டுவோர் ஆசிரியர் பெயருக்கு 25 காசுகள் தபால் வில்லை அனுப்பி நூலைப்பெற்றுக் கொள்ளலாம். (அம்பை)

* * * *

"நாயகன் பேட்டைச் செல்வ விநாயகர் செந்தமிழ்ப் பதிகங்கள்" என்னும் நூல் வரப்பெற்ருேம். இந்நூலுள் காப்பு 2 பாடல், 3 பதிகங்கள் ஆக 32 பாடல்களும் ஔவையார் அருளிச் செய்த விநாயகர் அகவலு முள்ளன. இப்பதிகங்கள் யாவும் காஞ்சி தொண்டை மண்டலாதீனப் புலவர் பாவலர், நா. ப. தணிகையரசு அவர்களால் பாடப் பெற்றன. பாடல்கள் செம்பாகமாகவும், இறையன்பிலீடுபடுத்தத்தக்கவையாகவும் அமைந்துள்ளன. 7-2-69 அன்று நிகழ்ந்த மேற்குறித்த விநாயகர் கோயில் குடமுழுக்கு விழாவில் இது வெளியிடப் பெற்றது. நூல் கிடைக்குமிடம்:-

நா. ப. தணிகையரசு,
ஞானப்பிரகாச தேசிகர் மடம்,
காஞ்சிபுரம்.

என்பதாகும் விலை குறிக்கப் பெறவில்லை. 25 காசுகள் தபால் தலை யனுப்பி யாவரும் பெற்றுப் படித்து இறையருள் நாட்டம் பெறுவார்களாக. (அம்பை)

பிற செய்திகள்

சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் 66ஆம் ஆண்டு விழா 26, 27-4-69ஆம் நாள்களில் சபைக் கட்டிடத்தில் மகாவித்துவான் திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை, திரு. சி. நடராச முதலியார் பி. ஏ., பி. எல். ஆகியோர் தலைமையில் முறையே நிகழ்ந்தன. சபையின் வயிர விழா மலர் வெளியிடும் தாம்பரம் திரு. ச. நடேச முதலியார் அவர்களுக்குப் பொன்னுடை போர்த்தியதும் சிறப்பு நிகழ்ச்சிகளாகும். சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் வாழ்த்துரை கூறினர். பலர் சொற்பொழிவாற்றினர்.

புரசைத் திருநெறிக் கழக 98ஆம் திங்கள் வழிபாடு 27-4-69 அன்று சென்னை இராயபுரம் சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் மாலையில் சிறப்புற நிகழ்ந்தது.

காஞ்சி மெய்கண்டார் கழகச் சார்பில் 25-4-69ல் சித்திரை வெள்ளி வழிபாடு காமாட்சியம்மையார் திருக்கோயிலிலும் 27-4-69ல் காஞ்சிச் சிவதல வார வழிபாடு ஆனந்தருத்திரேசர் திருக்கோயிலிலும் 30-4-69ல் உமாபதி சிவாச்சாரியார் திருநாள் கச்சபேசர் திருக்கோயிலிலும் சிறப்புற நிகழ்ந்தன. புலவர் மாமணி திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார் முதலிய பல பெருமக்கள் சமய விரிவுரைகளாற்றினர்.

கோவை பேரூர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடத்தின் சார்பில் சைவ சித்தாந்த வகுப்புக்கள் 23-4-1969 முதல் 8-5-69 முடிய நிகழ்ந்தன. காஞ்சிபுரம் தொண்டைமண்டலாதீனம் அருள்மிகு ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் சிவப்பிரகாசம் பற்றியும் அவிரோதவுந்தியார் பற்றியும் விளக்கி அருளுரையருளினார்கள். கவியரசு கு. நடேசக் கவுண்டர் அவர்கள் சமய இலக்கணத் தொடர்பும் புராணமும் பற்றி விளக்கினார்கள். காலை 5 மணி முதல் இரவு 9 மணி முடிய தங்கியிருப்போருக்கு உண்டி உறையுள், சமய ஒழுகலாறுகள் பற்றிய விளக்கங்கள் வழங்கப்பெற்றன. இத்தகைய சமய விளக்க வகுப்புக்கள் இற்றைக் காலத்து மிகவும் வேண்டற்பாலன. இவ்வகுப்புக்களை நன்முறையில் நடத்தி வைத்த அருள்திரு சாந்தலிங்க அடிகளார் அவர்கட்கும் பிறருக்கும் சமய உலகம் மிகவும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையது.

நாகர்கோயில் நன்னெறி மன்றத்தின் சார்பில் வடிவீசுவரம் திரு. இராமசாமிப் பிள்ளை அவர்கள் இல்லத்தில் 10-5-69

அன்று திருநாவுக்கரசு நாயனூர் குருபூசை விழா சித்தாந்தக் காவலர் திரு. சி. வள்ளிநாயகம் பிள்ளை அவர்கள் தலைமையில் சிறப்புற நிகழ்ந்தது.

நம் சமாஜ உறுப்பினர் திரு. S. அருணாசலம் அவர்கள் முதல் மகனுர் திருவளர் செல்வர் A. இராமலிங்கம் L. M. E. அவர்களுக்கும் பாளையங் கோட்டை திரு S செல்லப்பா அவர்கள் முதல்மகள் திருவளர் செல்வி இரத்தினமாலாவுக்கும் கோவை R. S. சவிதா ஹாலில் 24-4-69 காலை சிறப்புறத் திருமணம் நிகழ்ந்தது. புதுமணமக்கள் எல்லா நற்பேறு களும் பெற்று நல்வாழ்வு வாழ்ந்துய்ய எல்லாம் வல்ல பெம் மான் அருள் சுரக்க வேண்டி வழுத்துகின்ருேம்.

மதிப்புரை

''பாடல்பெற்ற திருத்தலங்களிலுள்ள இறைவன் இறைவி போற்றித் திருப்பெயர்கள்'' என்னும் நூல் வரப்பெற்ருேம். நம் சமயாச்சாரியப் பெருமக்களால் பாடல் பெற்ற திருத்தலங் கள் 274. இத்தலங்களில் எழுந்தருளியுள்ள பெருமான் திருப் பெயரோடு போற்றி சேர்த்தும் தலைவி திருப்பெயரோடு போற்றி சேர்த்துமாக நாமாவளியென இந்நூல் மிளிர்கின் றது. இந்நூலிலிருந்து தலங்கள் பெயரையும் அங்குள்ள இறைவன் இறைவி திருப்பெயர்களையும் அறிய வாய்ப்பா யிருப்பதோடு தமிழ்முறையிலர்ச்சனை செய்யவிரும்புவோ ருக்கு இந்நூல் மிகவும் ஏற்புடைத்தாயிருக்கும் தமிழில் 16,108 போல 1008 போற்றித் திருப்பெயர்கள் வழிபாட்டுக் குக் கிடைக்குமோ என ஐயுறுவோர்க்கு உறுதுணையா யமையும்.

இதனை ஆக்கி வெளியிட்டவர் திருச்சி மாவட்ட சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலைய ஊரன் அடிகள் ஆவார். அவர் தொண்டு சிறப்பதாகுக. இதன் விலை 25 காசுகள். நூல் வேண்டுவோர் :— சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், சமயபுரம் அஞ்சல், திருச்சிராப்பள்ளி மாவட்டம் என்னும் முகவரிக்கு 35 காசு அஞ்சல் தலை யனுப்பினுல் நூல் அஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்பெறும். யாவரும் வாங்கி யோதிப் பயன்பெறுவார்களாக (அம்பை)

Printed at the Sengunthamithran Press, 33, Armenian Street, Madras by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.